பக்கங்கள் : நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 பங்குனி 23 வெள்ளிக்கிழமை (06.04.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 130

# தமிழர்கள் மீது அரசுக்கு அக்கறையே இல்லை; கிழக்கு வேகமாகச் சிங்கள மயமாக்கப்படுகிறது

## நாடாளுமன்றில் சம்பந்தன்



கொழும்பு,ஏப்.6

தமிழ் மக்களுக்கு இந்த நாட்டில் எவ்விதமான பாதுகாப்பும் இல்லை. பாதுகாப்புப் படையினரின் நடவடிக்கைகள் எமது மக்களுக்குப் பெரும் அச்சுறுத்தலாகவே உள்ளன.

எல்லாப் பக்கங்களிலும் எல்லா வகைகளிலும் தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கைகளே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவர்களின் உரிமைகள் யாவும் மீறப்படுகின்றன.

இவை மாத்திரமின்றி, வடக்கு - கிழக்குப் பிரிக்கப்பட்டதைத் தொடர்ந்து கிழக்கு மிக வேகமாகச் சிங்கள மயமாக்கப்பட்டு வருகிறது. அங்கு தமிழர்களை அடக்கி ஒடுக்கும் நடவடிக்கைகளே மேலோங்கி நிற்கின்றன.

(03 ஆம் பக்கம் பார்க்க)

## 3 நாள்களுக்கு ஊரடங்கு இரவு 8 மணிமுதல்

யாழ்ப்பாணம், ஏப்.6

யாழ்ப்பாணக் குடாநாட்டின் சகல பகுதிகளிலும் நேற்றுத் தொடக்கம் மூன்று தினங்கள் ஊரடங்கு இரவு 8 மணிமுதல் அதிகாலை 4மணிவரை நடைமுறையில் இருக்கும் என்று பலாலி ஊடக நிலையம் நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தது.

கிறிஸ்தவ மக்களின் மதத் திருநாள்களை ஒட்டிய பிரார்த்தனைகள், நிகழ்வுகளை முன்னிட்டே மேற்குறிப்பிட்ட 3 நாள்களிலும் ஊரடங்கு தளர்த்தப்பட்டிருப்பதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## விடுதலைப் புலிகளின் வான் தாக்குதலை உலகின் எந்த நாடும் கண்டிக்கவில்லையே....!

### ஜே.வி.பியின் வீரவன்ச விசனம்

கொழும்பு, ஏப்.6

''சர்வதேச நாடுகளின் ஆதரவை இலங்கை அரசு அடியோடு இழந்துவிட்டது. விடுதலைப் புலிகளின் வான் தாக்குதல் தொடர்பாக சர்வதேச சமூகம் மௌனம் சாதிப்பது இதனை அப்பட்டமாக உறுதிப்படுத்துகிறது'' - என்று குறிப்பிட்டு, இது தொடர்பாக விசனம் தெரிவித்திருக்கின்றார் ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளரும் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான விமல் வீரவன்ஸ.

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலம் நீடிக்கும் பிரேரணைமீது நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

அவர் அங்கு மேலும் கூறியவையாவது:-

உலக பயங்கரவாத நாடான அமெரிக்கா உட்பட சர்வதேச நாடுகளின் ஆதரவைப் பெறவேண்டும் என்பதற்காகவே இந்த அரசு ஜே.வி.பியுடனான தனது உறவைத் துண்டித்துக்கொண்டது.

ஜே.வி.பியினரின் நல்லாலோசனைகளுடன் செயல்பட்டால் சர்வதேச சமூகத்தின் முகம் கறுத்துவிடும் என அரசு கருதியது.

ஆனால், இப்பொழுது நடப்பது என்ன? சர்வதேச பயங்கரவாத இயக்கம் என அங்கீகரிக்கப்பட்ட புலிகள், கட்டுநாயக்க விமானப் படைத்தளத்தின் மீது தாக்குதல் நடத்தியபோது இந்த அரசின் கூட்டாளியான

(03 ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகாலச்சட்ட நீடிப்பு; ஐ.தே.க. வாக்களிக்கவில்லை

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதகாலத்துக்கு நீடிப்பது தொடர்பான பிரேரணை நூற்றி மூன்று அதிகபடியான வாக்குகளினால் நேற்று நாடாளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டது.

இப்பிரேரணைக்கு ஆதரவாக 119 வாக்குகளும், எதிராக 16 வாக்குகளும் அளிக்கப்பட்டன. ஐக்கிய தேசியக் கட்சி அவசரகாலச் சட்ட நீடிப்பு பிரேரணைக்கு வாக்களிப்பதிலிருந்து விலகியிருந்தது.

ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய, இ.தொ.காங்கிரஸ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியன பிரேரணைக்குச் சார்பாக வாக்களித்தன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரேரணைக்கு எதிராக வாக்களித்தது. மேலக மக்கள் முன்னணி, மலையக மக்கள் முன்னணி என்பன நாடாளுமன்றத்துக்கு சமுகமளித்திருக்கவில்லை. (சி)

## மண்டைதீவுக் கடலில பீரங்கி வேட்டுக்கள்

யாழ்ப்பாணம், ஏப்.6

மண்டைதீவு, அல்லைப்பிட்டிக் கடற்பகுதியில் புதன்கிழமை இரவு பீரங்கி வேட்டுச் சத்தங்களும் ஷெல் தாக்குதல் சத்தங்களும் கேட்டன.

• நள்ளிரவுக்குப் பின்னரும் அப் பகுதியில் சத்தங்கள் கேட்டதாக அந்தப் பிரதேச வாசிகள் தெரிவித்தனர்.

சேதவிவரங்கள் குறித்துத் தகவல் ஏதும் தெரியவில்லை. (அ-1)

## பரீட்சை முடிவுகள் இன்று வெளியாகும்

கடந்த டிசெம்பரில் நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை முடிவுகள் இன்று யாழ்ப்பாணத்தில் வெளியாகும் என கல்வித் திணைக்கள வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன.

பரீட்சை முடிவுகள் தபால் மூலம் யாழ். கல்வி வலயத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன. அவை இன்று யாழ்ப்பாணத்துக்கு வந்து சேரும் என மேலும் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## பிரதமருக்கு நிறைவேற்று அதிகாரம்; சுதந்திரக் கட்சியின் யோசனை இது

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழித்து, நிறைவேற்று அதிகாரம் உடைய பிரதமரைக் கொண்ட நாடாளுமன்ற முறையை உருவாக்கவும், ஒன்றுபட்ட இலங்கைக்குள் அதிகாரப் பரவலாக்கலை மேற்கொண்டு இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்குமான தனது ஆலோசனையை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எதிர்வரும் மே முதலாம் திகதி தொழிலாளர் தினத்தன்று வெளியிடும் இத்தகவலை கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன நேற்று வெளியிட்டார்.

அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் செய்தியாளர் மாநாடு நேற்று மாலை தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தொடர்ந்து தகவல் தருகையில் கூறியதாவது:-

சர்வ கட்சிப் பிரதிநிதிகள் குழுவுக்கு ஸ்ரீல.சு.கட்சி முன்வைக்கும் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான ஆலோசனைகள் முன்மாதிரியானவை. சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு எமது ஆலோசனையையும், இறுதி ஆலோசனையையும் ஆராய்ந்து இறுதி வரைவைச் சமர்ப்பிக்கும் - என்றார். (அ-சி)

## வடக்கு-கிழக்கை இணைத்து அதிகாரப் பகிர்வு மூலம் தீர்வு

### தமது நிலைப்பாடு இது என்கிறார் அநுரா



கொழும்பு, ஏப். 6

இனப்பிரச்சினைக்கான சரியான தீர்வானது வடக்கு - கிழக்கை மீள இணைப்பதன் மூலமும் அதிகாரப்பகிர்வின் மூலமுமே சாத்தியப்படும்.

இதுதான் எனது நிலைப்பாடு. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் நிலைப்பாடு வேறு விதமாக இருக்கிறது. துரதிஷ்டவசமாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் இந்த நிலைப்பாட்டுக்கு நான் கட்டுப்பட்டிருக்கின்றேன்.

- இவ்வாறு அமைச்சர் அநுர பண்டாரநாயக்க நேற்று நாடாளுமன்றில் கூறினார். நேற்று சபையில்

(03 ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டின் அரைப்பகுதி இருளில் மூழ்கும் அபாயம்!

### மின்சார உற்பத்தி குறைந்துள்ளதால்

யாழ்ப்பாணம், ஏப்.6

மின்சார விநியோகம் தடைப்பட்டு குடாநாட்டின் அரைப்பகுதி இருளில் மூழ்கும் அபாயம் உருவாகியுள்ளது.

குடாநாட்டில் சகல பகுதிகளுக்கும் போதியளவில் மின் விநியோகத்தைச் சீராக மேற்கொள்வதற்கு, 35 மெகாவாட்ஸ் மின்சாரம் தேவை.

ஆனால், மின்சாரசபைக்குத் தற்போது 19 மெகாவாட்ஸ் மின்சாரமே கிடைப்பதால் மின்வெட்டை மேற்கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாக மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதுவரை 15 மெகாவாட்ஸ் மின்சாரத்தை வழங்கிவந்த 'கூல் எயார்' நிறுவனம் கடந்த புதன்கிழமை தொடக்கம் 4 மெகாவாட்ஸ் மின்சாரத்தை மட்டுமே வழங்கமுடியும் என மின்சாரசபைக்குத் தெரிவித்துள்ளது.

இந்த நிறுவனத்துக்கும் மின்சாரசபைக்கும் இடையிலான உடன்பாடு முடிவடைந்துள்ளதால், 4 மெகாவாட்ஸ் மின்சாரத்தை மட்டுமே வழங்கமுடியும் என்று அது தெரிவித்துள்ளதாக அறியப்படுகிறது.

'அக்பறிக்கோ' நிறுவனம் வழங்கும் 15 மெகாவாட்ஸ் மின்சாரம், கூல் எயர் நிறுவனம் வழங்கும் 4 மெகாவாட்ஸ் மின்சாரம், மின்சார சபையின் சுன்னாகம் மின்

(04 ஆம் பக்கம் பார்க்க)

## ஆழ ஊடுருவும் அணி தாக்குதல்: கணவனும் மனைவியும் உயிரிழப்பு!

### மன்னார் நட்டாங்கண்டல் வீதியில் சம்பவம்

கொழும்பு,ஏப்.6

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள மன்னார், பாலம்பிட்டியில் அமைந்துள்ள நாட்டங்கண்டல் வீதியில் நேற்று இடம்பெற்ற கிளைமோர்த்தாக்குதலில் கணவனும் மனைவியும் உயிரிழந்தனர்.

நேற்றுப் பிற்பகல் 1.45 மணியளவில் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த தம்பதியர் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

வவுனியா, பாவற்குளம் 8ஆம் யுனிற்றை சொந்த முகவரியாகவும் - பெரியதம்பனை தட்சணாமருதமடுவை தற்காலிக முகவரியாகவும் கொண்ட 4 பிள்ளைகளின் பெற்றோர்களான ரவீந்திரன் - ரவி (வயது 54), ரவி-சிந்து (வயது 42) ஆகியோரே இதில் உயிரிழந்தவர்களாவர்.

இதேவேளை - விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள மற்றொரு எல்லைப் புறப் பிரதேசமான வவுனியா சமளம் குளத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்ட கிளைமோர்த் தாக்குதலில் 5 பிள்ளைகளின் பெற்றோர்களான நாகராசா சுபாஸ்சந்திரபோஸ் (வயது 47), அவரது மனைவியான இராணி (வயது 45) ஆகியோர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த இரு தாக்குதல்களையும் சிறிலங்கா இராணுவத்தின் ஆழ ஊடுருவும் அணியினரே மேற்கொண்டனர் என்று விடுதலைப் புலிகள் குற்றஞ்சாட்டியிருக்கின்றனர். (

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சந்தேகத்துக்கிடமான பிரதேசங்களைத் தவிர்ப்போம்! அங்கே வெடிபொருள்களின் ஆபத்துக்கள் இருக்கலாம்

சர்வோதயம் வெண்புறா யுனிசெவ்

(சி/48853)

### யாழ்.பாண்டியந்தாழ்வு
### அருள்மிகு ஸ்ரீ நரசிம்ம ஞானவைரவர் தேவஸ்தானம்
### கட்டட நிதிக்கான அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக குறிப்பிட்ட திகதியில் (20.08.06) சீட்டிழுப்பினை நடத்த முடியாது போனது. எனவே ஏற்பட்ட சிரமங்களிற்கு மனம் வருந்துகின்றோம். இறைவன் திருவருளால் எதிர்வரும் (08.04.2007) ஞாயிற்றுக்கிழமை மாலை 3மணிக்கு ஆலய மண்டபத்தில் சீட்டிழுப்பு நிகழவுள்ளது.

முதலாம் பரிசு துவிச்சக்கரவண்டி
2 ஆம் பரிசு கசட் றேடியோ
3 ஆம் பரிசு சாச்சர் லைட்
மேலும் பத்து ஆறுதல் பரிசுகள்.

ஆலய நலன்விரும்பிகள்.

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்
### மாணிக்கம் பாலசிங்கம்

பிறப்பு 24.02.1935
இறப்பு 19.03.2006
திதி : 06.04.2007

குலதெய்வம் போலெமது குடியுயர ஒளி தந்து
உலகினையே விட்டகன்று ஆண்டொன்று ஆனாலும்
கலங்கரை விளக்கான குடும்பத்தின் தலைவனே!
நல்வாழ்வு தந்தாயே நெஞ்சிலுமை சுமக்கின்றோம்.

வீரபத்திரர் கோவிலடி,
வியாபாரிமூலை.

உம் நினைவோடு
குடும்பத்தினர்.

(59309)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியர்
யோ.ஜெகானந்தன் அவர்களின் அன்புத் தாய்
### திருமதி யோகானந்தம் ஜெகஜெனனி

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பெற்றோர், பழைய மாணவர்கள்.
கொக்குவில் இந்துக் கல்லூரி.

(சி-48875)

## VACANCIES
## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA.
### VAVUNIYA CAMPUS

University of Jaffna will entertain applications from suitably qualified persons for the under mentioned posts upto 30.05.2007

**FACULTY OF APPLIED SCIENCE**
1. Senior Lecturer Gr.I/Senior Lecturer Gr.II/ Lecturer (Probationary) in Mathematics / Statistice / Food Science or Micro Biology or Environmental Chemistry
2. System Engineer (Age not more than 45 years)
3. Programmer Cum System Analyst Grade II (Age not more than 45years)

**FACULTY OF BUSINESS STUDIES**
1. Senior Lecturer Gr.I/SeniorLecturer Gr.II/ Lecturer (Probationary) Accounting/Management.

| POST | SALARY SCALE |
|---|---|
| Senior Lecturer Gr.I | Rs. 42,650-7x800-48,250 p.m |
| SeniorLecturer Gr.II | Rs. 37,650-7x700-45,350 p.m |
| Lecturer (Probationary) | Rs. 26,900-10x585-32,750 p.m |
| System Engineer | Rs. 25,145-3x585-26,900 (EB) 28,655-13x585-36,260 p.m |
| Programmer Cum System Analyst Grade II | Rs. 25,145-3x585-26,900(EB) 28,655-13x585-36,260 p.m |

**Note :** In addition to the above salary, the allowances approved by the University Grants Commission will also be paid.

**Statutory benifits**
i. Sabbatical leave entitlement for the holder of the Post of Senior Lecturer Gr.II and above.
ii. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University system.
iii. Gratuity Payments
iv. Employees' Trust Fund benefits.
v. Free Medical Services.

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar / Eatablishments, University of Jaffna, Sri Lanka, either in person or by post, on a payment of Rs.100/= per form. Those who wish to obtain all application forms by post are requested to send a Money Order / Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self adderssed stamped envelope 23x10 c.m.in size.

Those who wish to apply for **more than one** post should apply in **seperate forms.**

Applicants from the University System / Government Departments / Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Instututions. Application received after the closing date will be rejected without intimation. Only short listed applicants will be called for an aptitude test / interview.

4TH APRIL 2007

REGISTRAR
UNIVERSITY OF JAFFNA
SRI LANKA.

## கார் விற்பனைக்கு

டாக்டரின் தனிப்பாவனையிலுள்ள KIA - Spectra கார் Silver Colour, Full Option WP JB xxxx இலக்கம் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0775018155, Dr. உமாசங்கர்
பார்வையிடும் இடம்: யாழ்.போதனா வைத்தியசாலை.

## அபூர்வ ஜோதிடம்

அவஸ்தை தரும் நோய் குணமாதல் சுகானந்த பெருவாழ்வுக்கான அதிர்ஷ்ட பலன் அறிதல்.
தினமும் 8.00 a.m 1.00 p.m
உயரப்புலம் பிள்ளையார் கோயிலடி,
விதானையார் வளவு,
ஆனைக்கோட்டை.

## விற்பனைக்கு

அசல் பஜாஜ் முச்சக்கர, இரு சக்கர வண்டிகளின் உதிரிப்பாகங்கள் மொத்த விற்பனைக்கு உள்ளன.
தொடர்பு: ஆரணி ஓட்டோர்ஸ் ஸ்பெயார்ஸ்
ஞானவைரவர் கோயிலடி,கோப்பாய் றோட்,
உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.தொ.பே.: 222 6942
சந்திக்கும் நேரம் காலை 9 மணிதொடக்கம் பிற்பகல் 2 மணி வரையும். குறிப்பிட்ட தினங்களில் மாத்திரம்.
(05.04.2007 தொடக்கம் 18.04.2007 வரை)



## விற்பனைக்கு

10 அடி Korean தயாரிப்பு டிஸ் அன்ரனா LNB உடன் விற்பனைக்குண்டு.
T.P.: 0777 283795.

கலை, வர்த்தக வெற்றித் தேர்விற்கு
அன்றும் இன்றும் இனி என்றென்றும்
### விக்னா கல்வி நிறுவனம்
தலைமையகம், 52, ஸ்ரான்லி வீதி, யாழ்.

பிரிவு 2
### A/L 2009
கலை, வர்த்தக வகுப்புகள்
ஆரம்பம் : 07.04.2007 (8மணி)
புதிய அனுமதிகள் இன்றுமுதல் வழங்கப்படும்.

(சி-488715)

## BARATHY
### சித்தன்கேணி

O/Lபரீட்சையில் அதிஉயர் பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களை வாழ்த்தி இதேபோன்று நீங்களும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றிட

### O/L Day Class

புதிய பிரிவு ஆரம்பம்:
09.04.2007 திங்கட்கிழமை 8 a.m
எமது தனித்துவமும் அதிதிறமையும் கொண்ட ஆசிரியர் குழுவினால்

| | |
|---|---|
| விஞ்ஞானம் திரு.தேவா | கணிதம் திரு. எஸ்.சிவரூபன் |
| தமிழ் திரு.குகபரன் திரு.தமிழ்மாறன் | சமூகக் கல்வி திரு. சுதன் திரு.சந்திரன் |
| ஆங்கிலம் திரு.விஜயபாஸ்கர் திரு.இராஜகுலசூரியர் | சமயம் திரு.தரன் |
| | வர்த்தகம் திரு.லோகேஸ்வரன் |

குறிப்பு: ✱ மேற்குறிப்பிட்ட ஆசிரியர்கள் இப்பிரதேசத்தில் வேறு நிறுவனங்களில் கற்பிக்க மாட்டார்கள்.
✱ சென்ற ஆண்டுபோல் இவ்வாண்டும் 100 மாணவர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும். அனுமதிக்கு முந்திக்கொள்ளுங்கள்

(59331)

## Wanted

**Manager/Clerk**

யாழ். நகரில் இயங்கும் தொலைத் தொடர்பு நிலையத்துடன் சம்பந்தப்பட்ட ஸ்தாபனத்துக்கு முகாமையாளர்/ லிகிதர் தேவைப்படுகின்றனர். உடனே விண்ணப்பிக்கவும்.
விளம்பர இல. 2962
C/o உதயன்
யாழ்ப்பாணம்.

## தேவை

வைத்தியர்களின் விடுதி ஒன்றில் சமைப்பதற்கு (மதியம், இரவு) ஆள்கள் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு:
தொலைபேசி
0777399093

மாவை கொல்லங்கலட்டி சிதம்பரேஸ்வரம்
ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்
ஸ்ரீமத் சிதம்பரேஸ்வரர் சுவாமி திருக்கோயில்
### சித்திரத்தேர் அச்சேற்றும் வைபவ விஞ்ஞாபனம்

சுவஸ்திஸ்ரீ நிகழும் விய வருடம் பங்குனி மாதம் 26ஆம் நாள் 09.04.2007 திங்கட்கிழமை தேவேந்திர முகூர்த்தத்தில் நண்பகல் 12.00 மணிக்கு அச்சேற்றும் வைபவம் நடைபெறும். அன்று அனைவரும் வருகை தந்து வைபத்தைத் சிறப்பித்து பிள்ளையார், சிவபெருமான் திருவருள் பெற்று பெரும் பேறடைவீர்களாக.

சித்திரத்தேர் அமைப்பு :
விஸ்வப்பிரம்மஸ்ரீ செல்லையா விஸ்வலிங்கம் ஆசாரி
ஸ்ரீ காமாட்சி அம்பாள் சிற்பாலயம், நீர்வேலி, வடக்கு, நீர்வேலி

சித்திரத்தேர் விரைவில் நிறைவுற உங்கள் எல்லோரது பண உதவி தேவைப்படுகிறது. மனப்பூர்வமாக உதவுவோர் உதவவும். காலை 9 மணிக்கு முன் தெல்லிப்பழை தடை முகாமுக்கு வரவும்.

ஸ்ரீலஸ்ரீ சு.சிவஷண்முகனாந்தக் குருக்கள் — சி.கணேசலிங்கம் கௌரவ தனாதிகாரி — Dr.பொ.மகாதேவன் கௌரவ செயலாளர்
அறங்காவலரும் பிரதம சிவாச்சாரியாரும்
புனருத்தாரணசபைத் தலைவரும்

பணம் அனுப்பவேண்டிய வங்கிக் கணக்கு
REHABILITATION COMMITTEE A.C.NO.S.A: 7408
BANK OF CEYLON, KANKESANTHURAI
**SRIVEERAGATHTHJ VENAJAGAR TEMPLE**
SRIMATH SITHAMBARESWARA SUVAMI TEMPLE
SITHAMBARESWARAM, KOLANKALADDY, TELLIPPALAI, SRILANKA

## ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம்
## பதவி வெற்றிடம்

**களஞ்சியப் பொறுப்பாளர்**

1. சம்பளக் குறியீட்டு இல. : 202/13
2. சம்பளத் திட்டம் : 7750 - 75 x 10 - 80 x 10 - 9300
3. வயது எல்லை : 25 தொடக்கம் 45வரை.
4. விண்ணப்ப முடிவு திகதி : 16.04.2007
5. பிணை : ரொக்கம் ரூ.25000/- ஆதனம் ரூ.25000/- அல்லது ரொக்கம் ரூ.15000/-
6. 1. சங்க எல்லைப்பரப்பில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
   2. சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.
   3. வேறு சங்கங்களிலிருந்து விண்ணப்பிப்பவர்கள் சங்கத்தினூடாக விண்ணப்பிக்க வேண்டும்.
7. *தகைமைகள்:*
   1. கூட்டுறவுப் பணியாளர் 202/14 ஆவது சம்பளத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட பகுதியில் 2 வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 202/15 ஆவது சம்பளத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட பகுதியில் 4வருடத்திற்குக் குறையாத அனுபவம்.
   அல்லது
   கூட்டுறவுப் பணியாளர் சா.தரம் சித்தி அல்லது க.பொ.த. (சா.தர) தமிழ், கணிதம்/வர்த்தக கணிதம்/எண்கணிதம் உட்பட 4பாடங்களில் திறமைச் சித்தியுடன் 6பாடங்களில் சித்தியும் மேற்குறித்த பதவியில் 2வருட அனுபவமும் பெற்றிருத்தல் வேண்டும்.
8. விண்ணப்பங்கள் யாவும் *"பொது முகாமையாளர், ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம், ஊர்காவற்றுறை"* என்ற முகவரிக்கு நேரிலோ, பதிவுத் தபாலிலோ 16.04.2007ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியவாறு அனுப்பிவைக்கவும்.

பொது முகாமையாளர்,
ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம்.

(சி/48882)

## மரண அறிவித்தல்

### யோகேஸ்வரி சுப்பிரமணியம்



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் நாவற்குழி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் யோகேஸ்வரி நேற்று(05.04.2007) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிர மணியத்தின் அன்பு மனைவியும் தவக்குமார்(பிரான்ஸ்), இங்கிரரூபி, சுகந்தரூபி ஆகியோரின் அன்புத் தாயும் திருஞானசம்பந்தர், அற்புதராஜா(மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்), கமலேஸ்வரி(பிரான்ஸ்) ஆகி யோரின் அன்பு மாமியும் தவதாஸ்(லண்டன்), இளையதாஸ்(லண்டன்), மோகனதாஸ்(புத்தளம்),கஜதாஸ்(புத்தளம்), சிவதர்சன் (கொழும்பு), காயத் திரி, கரிகரன், தினேஸ், தாரணி, கௌதமி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் பிரவீனின்(லண்டன்) பூட்டியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று(06.04.2007) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நாவற்குழி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாவற்குழி மேற்கு, பிச்சம்பள்ளம்,
நாவற்குழி, கைதடி.

தகவல்:
இங்கிரரூபி, சுகந்தரூபி
(மகள்மார்)

(59326)

## A/L 2009 கலை, வர்த்தகப் பிரிவுகள்

பின்வரும் மூன்று நிறுவனங்களில் புதிய பிரிவுகள்
யாழ். நகரின் பிரபல்யம் பெற்ற ஆசிரியர் குழுவினால்

| 2009 | பொருளியற் கல்லூரி யாழ். | பொருளியற் கல்லூரி இணுவில் | BARATHY சித்தன்கேணி |
|---|---|---|---|
| பொருளியல் | M.C.சுதாகரன் | M.C.சுதாகரன் | M.C.சுதாகரன் |
| கணக்கீடு | முகுந்தன் | முகுந்தன் | முகுந்தன் |
| வணிகக் கல்வி | முரளி | முரளி | பசில் |
| தமிழ் | மீரா | பாலா | பாலா |
| இந்து நாகரீகம் | ஜோதிஸ்வரன் | சுரேஸ் | சுரேஸ் |
| அளவையியல் | R.P.சர்மா | ஜெயசுரேஸ் | R.P.சர்மா |
| புவியியல் | குமரன் | குமரன் | குமரன் |
| நாட.அரங்கியல் | கணேஷ் | கணேஷ் | சுதன் |
| இந்துசமயம் | தரன் | தரன் | தரன் |
| கிறிஸ்தவம் | வசந்தன் | வசந்தன் | வசந்தன் |
| வரலாறு | சுதன் | சுதன் | சுதன் |
| அரசியல் | றஜீவன் | சுகாஷ் | சுகாஷ் |
| ஆங்கிலம் | நிஷாந்தன் | நிஷாந்தன் | நிஷாந்தன் |

**பொருளியற் கல்லூரியில்** ஆரம்பம்: 07.04.2007 சனி
யாழ். நகரில் - கலை, வர்த்தகம் 9 a.m
இணுவிலில் - கலை 9 a.m வர்த்தகம் 11 a.m

**BARATHY சித்தன்கேணியில்** வர்த்தகம் ஆரம்பம் - 06.04.2007 வெள்ளி 4 p.m
கலைப் பிரிவு ஆரம்பம் 07.04.2007. சனி 1 p.m

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொ.பே., 222 3837, 222 9933 தொ.ந.: 222 9944

## அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் கூட்டமும் அரங்கேறும் அபத்த நாடகமும்

*''இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் உட்பட யாவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வு ஒன்றை எனது அரசு விரைவில் முன்வைக்கும்.''* - இப்படி உறுதியளித்திருக்கின்றார் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு ('சார்க்') மாநாட்டில் கலந்துகொள்வதற்காகப் புதுடில்லி சென்றிருந்த ஜனாதிபதி, அந்த மாநாட்டில் பார்வையாளர் அந்தஸ்தில் கலந்து கொண்ட அமெரிக்க நாட்டுப் பிரதிநிதியான - அந்நாட்டின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான பிரதி இராஜாங்க அமைச்சரான - ரிச்சர்ட் பௌச்சரிடமே இந்த உறுதிமொழியை நேரில் வழங்கியிருக்கின்றாரெனச் செய்திகள் தெரிவித்தன.

நாட்டின் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் பொருட்டு தெற்கின் சகல அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைத்துக் கூட்டப்பட்டிருக்கும் அனைத்துக்கட்சிப் பிரதிநிதிகள் குழு குறித்துப் பிரஸ்தாபித்த ஜனாதிபதி, அந்தக் கலந்தாலோசனைகளின் முடிவில் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் பொதுவாக ஏற்றுக் கொள்ளும் அரசியல் தீர்வுத்திட்டம் ஒன்றை நாட்டின் பல்வேறுபட்ட மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வொன்றாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உறுதியளித்திருக்கின்றார்.

நாட்டை உலுக்கும் தேசிய இனப்பிரச்சினைக்கு நீதியான தீர்வு யோசனை ஒன்றைத் 'தேடிக் கண்டுபிடிப்பதற்காக' சர்வகட்சி மாநாடு, அனைத்துக்கட்சிப் பிரதிநிதிகள் கூட்டம், வட்ட மேசை மாநாடு என்று பல்வேறு 'திருவிழா'க்களை அவ்வப்போது நடத்துவது தென்னிலங்கையின் வழமை. சர்வதேச சமூகத்தின் காதில் பூச்சுற்றுவதற்கு அவ்வப்போது எடுக்கும் தொடர் நாடகங்கள்தாம் இவை

தமிழரின் தேசிய விடுதலைப் போராட்டம் ஆயுத வழிக்குத் திரும்பி பெரும் போராக விரிவடைய முன்னரே - உரிமைக்கான தமிழர்களின் தேசிய எழுச்சி காந்தீய வழியில் நெறிக்கப்பட்டு, அஹிம்சைப் பாதையில் முன்னெடுக்கப்பட்ட காலத்திலிருந்தே - இந்த பலகட்சிக்கூட்டம் அல்லது மாநாடு என்ற தந்திரம் தொடர் ஏமாற்று வித்தையாக அவ்வப்போது ஆட்சியிலிருந்த சிங்கள ஆட்சித்தலைவர்களால் அரங்கேற்றப்பட்டு வந்திருக்கின்றது.

தென்னிலங்கையில் புதிய புதிய ஆட்சித் தலைவர்கள் வந்தபோதெல்லாம் இத்தகைய மாநாடுகளும் கூட்டங்களும் ஆரவாரமாகக் கூட்டப்பட்டே வந்துள்ளன. வந்த தலைவர்கள் போனார்கள். புதிய தலைவர்கள் வந்தார்கள். அதேபோல நடந்த மாநாடுகள் பயனின்றிக் கலைந்தன. பயனின்றிக் கலைவதற்காக புதிய மாநாடுகள், சர்வகட்சிக்கூட்டங்கள் புதிது புதிதாகக் கூட்டப்பட்டன. இதுவே தொடர் வரலாறு.

அந்த வரிசையில் தென்னிலங்கையின் புதிய தலைவராக மஹிந்தர் பதவியேற்றதும் புதிய அனைத்துக்கட்சிக் குழு அமைக்கப்பட்டது. முன்னைய சர்வகட்சிக் கூட்டங்கள், வட்டமேசை மாநாடுகள் போல இதுவும் நீண்டகாலமாக இழுபடுகின்றது.

எப்போது பலன் கிடைக்கும், அது கிடைக்குமா என்பதெல்லாம் வழமைபோலச் சந்தேகமே.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான யோசனையைத் தயாரிக்கவெனத் தாம் அமைத்திருக்கும் அனைத்துக்கட்சிப் பிரதிநிதிகள் கூட்டம் குறித்து, அதிபர் மஹிந்த ராஜபக்ஷ இப்போது சிலாகித்துக் கூறினாலும் - தீர்வு யோசனை ஒன்றைத் தாம் விரைவில் சமர்ப்பிப்பார் என அமெரிக்காவை நம்பவைக்கும் நோக்கத்துடன் அதிபர் மஹிந்த ஆதாரம் காட்டும் இந்த அனைத்துக் கட்சிப்பிரதிநிதிகள் குழு குறித்துத் தமிழர் தரப்பின் கருத்தும் நிலைப்பாடும் முற்றிலும் வித்தியாசமானவை. அதனை அறிவதற்கு, கடந்த நவம்பர் இறுதியில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் ஆற்றிய மாவீரர் தின உரையில் இந்தக் குழு குறித்து அவர் குறிப்பிட்ட கருத்துக்களை நோக்குவது பொருத்தமானதாக இருக்கும்.

*''மஹிந்த உள்நாட்டில் தமிழின அழிப்புப் போரை நடத்திக்கொண்டு, உலக நாடுகளுக்கு சமாதானம் விரும்பும் ஓர் அமைதிப் புறாவாகத் தன்னை இனங்காட்ட முயல்கிறார். தனது ஏமாற்று நாடகத்திற்குப் பக்கத்துணையாக அனைத்துக்கட்சி மாநாட்டை கூட்டியிருக்கிறார். எந்தவொரு பிரச்சினைக்கும் முகம் கொடாது, தட்டிக்கழிக்க விரும்பினால், ஒரு விசாரணைக் கமிஷனையோ ஒரு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவையோ அழைத்து, சர்வகட்சி மாநாட்டையோ, ஒரு வட்டமேசை மாநாட்டையோ நடத்தி, அதனை முடிவில்லாமல் இழுத்தடிப்பது சிங்கள ஆட்சியாளர்களின் அரசியற் பாரம்பரியம். இதனைத்தான் மஹிந்தவும் செய்கிறார். பற்றியெரியும் தமிழரின் தேசியப்பிரச்சினைக்கு விரைவாகத் தீர்வு காணுமாறு நாம் வழங்கிய வாய்ப்புகளையும் உதாசீனம் செய்து, உதறித்தள்ளிவிட்டு, இந்த அனைத்துக் கட்சி மாநாட்டிற்குள் மஹிந்த பதுங்கிக் கிடக்கிறார். அந்த அனைத்துக் கட்சிக்குழுவும் கடந்த பத்து மாத காலமாக இருட்டுக்குள் கறுப்புப் பூனையைத் தேடியலைபவன் போலத் தமிழர் பிரச்சினையைத் தேடியலைந்து கொண்டிருக்கின்றது....''* - என்று பிரபாகரன் கூறியவை இங்கு கவனிக்கத்தக்கவை.

இந்த அனைத்துக்கட்சிப் பிரதிநிதிகள் கூட்டம் என்ற மாயமானைக்காட்டி அமெரிக்காவை கொழும்பு ஏமாற்றலாம். ஆனால் தமிழர் தாயகம் இந்த மாயமானைக் கண்டு ஏமாறும் சீதையின் பேதமை நிலையில் இப்போது இல்லை. அசோக வனத்திலிருந்து சிறை மீளும் தீரா உறுதிமிக்க சீதாதேவியின் திடசங்கற்பத்துடனேயே ஈழத் தமிழ் அன்னை இன்று நிற்கிறாள்.

## யாழ். கல்வி வலயம் முன்பான கல்வியாளர் மறியல் கைவிடப்பட்டது

யாழ்ப்பாணம், ஏப். 6

யாழ். மாவட்டத்தில் தற்காலிக இணைப்பு வழங்குமாறு கோரி, யாழ். வலயக் கல்வி அலுவலகம் முன்பாக வெளிமாவட்டங்களில் பணியாற்றும் கல்விசார், கல்வி சாரா உத்தியோகத்தர்கள் மேற்கொண்ட மறியல் போராட்டம் கைவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தமது கோரிக்கைகளுக்கு உரிய தீர்வைப் பெற்றுத் தருவதற்குச் சம்பந்தப்பட்ட தரப்புகள் உறுதியளித்துள்ளதை அடுத்தே தாம் மறியல் போராட்டத்தைக் கைவிட்டுள்ளதாக போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

தமது கோரிக்கைகளுக்கு இரண்டு நாள்களுக்குள் உரிய தீர்வைப் பெற்றுத் தருவதாக சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்ததாக அவர்கள் தெரிவித்தனர்.

இதற்காக மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட உத்தியோகத்தர்களின் முழு விவரங்களையும் திரட்டி அனுப்பி வைப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு அனைவரையும் யாழ். வலயக் கல்வி அலுவலகத்துக்கு அருகாமையில் ஒன்று கூடுமாறு கேட்டுள்ளனர். (அ-8)

## பாடசாலை விடுமுறை

யாழ்ப்பாணம், ஏப். 6

குடாநாட்டில் பாடசாலைகள் அனைத்தும் முதலாம் தவணை விடுமுறைக்காக நேற்று மூடப்பட்டன.

பாடசாலைகள் மீண்டும் இரண்டாம் தவணைக்காக ஏப்ரல் மாதம் 23ஆம் திகதி திறக்கப்படும் என்று கல்வி வலய வட்டாரங்கள் தெரிவித்தன. (1-4)

## மூத்த கல்வி நிர்வாகி சுந்தரலிங்கம் காலமானார்



கொழும்பு, ஏப். 06

மூத்த கல்வி நிர்வாக அதிகாரியும், முன்னாள் வட மாநிலக் கல்விப் பணிப்பாளரும் கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் தலைவருமான இரா. சுந்தரலிங்கம் கொழும்பில் காலமானார். அவருக்கு வயது 73.

சிறந்த தமிழ் மற்றும் சமயப் பற்றாளரான இரா. சுந்தரலிங்கம், விஞ்ஞான மற்றும் கலைப் பட்டதாரியாக ஆசிரிய சேவையினுள் நுழைந்து பின்னர் கல்வி உலகில் மிக உயர் பதவிகளை அலங்கரித்தவர்.

உதவிப் பரீட்சை ஆணையாள ராக சுமார் 25 வருடகாலம் பணியாற்றிய பிறகு - 1993இல் - வட மாநிலக் கல்விப் பணிப்பாள ராக நியமனம் பெற்றார்.

யாழ். குடாநாட்டின் கல்வி நிர்வாகம் ஒரே நிர்வாக அலகாக - ஒரே திணைக்களத்தின் கீழ் - இயங்கிய காலம் வரை அதன் கல் விப் பணிப்பாளராகச் சேவையாற் றியவர் சுந்தரலிங்கம்.

கடும் போர்ச் சூழலுக்கு மத்தியில் குடாநாட்டு மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் தடையின்றி முன்னெடுக்கப்படவும், பரீட்சைகளை உரியவேளையில் நடத்தி முடிப்பதிலும் மிகுந்த அர்ப்பணிப்புடன் செயற்பட்ட கல்வி நிர்வாகி அவர்.

இணுவிலைச் சொந்த இடமாகக் கொண்ட இரா சுந்தரலிங்கம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவு னியா, மன்னார் மாவட்டங்களி லும் கல்விப் பணிப்பாளராகச் சேவையாற்றியிருந்தார்.

யாழ். பல்கலைக்கழகத்தின் பேரவை உறுப்பினராகவும் விளங்கியவர்.

ஓய்வுபெற்ற பின்னர் வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கென நிறுவப்பட்ட மாகாணப் பரீட்சைத் திணைக்களத்தில் ஆணையாளரா கப் பணியாற்றினார். அரச கரும மொழிகள் திணைக்களத்திலும் சிறிது காலம் சேவையாற்றினார்.

தற்சமயம் கொழும்பில் வசித்து வந்த சுந்தரலிங்கம் இறக்கும் போது கொழும்பு தமிழ்ச் சங்கத் தின் தலைமைப் பதவியை அலங் கரித்தார். அதனூடாக சமய, சமூ கப் பணிகளை முன்னெடுத்தவர்.

அவரது மறைவு குறித்து கொழும்பு தமிழ்ச் சங்கம் ஆழ்ந்த அனுதாபத்தை வெளியிட்டிருக் கின்றது. (சி)

## மருந்து வகைகள் போதியளவில் கையிருப்பில்

யாழ். ப.நோ.கூட்டுறவுச் சங்க மருந்தகத்தில் போதிய அளவு மருந்து வகைகளை மருந்தகங்களும் தனியார் வைத்தியசாலைகளும் பெற்றுக்கொள்ளலாம்.

சுகாதார சேவைகள் பதில் பிரதி மாகாணப் பணிப்பாளர் க.தா. சிவபாதம் இத்தகவலைத் தெரிவித்தார்.

பிரதேச செயலர் மற்றும் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அனுமதியோ சிபார்சோ இல்லாமலே மருந்துவகைகளை கொள்வனவு செய்யலாம் என்றும் அவர் தெரிவித்தார். (அ-1)

## சமய சந்நிதிகளில்

நல்லூர் வடக்கு சந்திரசேகரப் பிள்ளையார் ஆலய பெருந் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 14ஆம் திகதி புது வருடத்தினத்தன்று தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (1-203)

* * *

காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகர் ஆலய வருடாந்த பெருந் திருவிழா இன்று முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 14ஆம் திகதி புத்தாண்டு தினத்தன்று பிற்பகல் 3 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறவுள்ளன. (203-73)

* * *

நல்லூர் பாணான்குளம் நாச்சி அம்மன் ஆலய மகோற்சவகால அபிஷேகமும் பாலஸ்தாபன கும்பாபிஷேகமும் இன்று காலை 7.45 மணிக்கு நடைபெறவுள்ளது.

## மத்தியஸ்தர் சங்கக் கூட்டம்

யாழ். மாவட்ட வலைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் நடத்தும் கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

திருமதி ரூபசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் சகல மத்தியஸ்தர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு சங்கச் செயலாளர் திருமதி ஜெயா சரவணபவ ஐயர் கேட்டுள்ளார்.

## நிதி சேகரித்தவர் சிலாபத்தில் கைது

விடுதலைப்புலிகளுக்கு நிதி சேகரிப்பதில் ஈடுபட்டவர் எனக் கூறப்படும் சந்தேக நபர் ஒருவர் சிலாபத்தில் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

சிலாபம் புலனாய்வுப் பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத்தகவல் ஒன்றினையடுத்தே இந்த நபர் கைதுசெய்யப்பட்டிருக்கிறார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வடமராட்சி கிழக்கில் விமானத் தாக்குதல்

விமானப்படையினரின் விமானத்தாக்குதல் நேற்றும் வடமராட்சி கிழக்குப் பகுதியில் தொடர்ந்தது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளான இயக்கச்சி மற்றும் கட்டைக்காடு ஆகிய இடங்களிலேயே இந்தத் தாக்குதல் நேற்று மதியம் இடம்பெற்றதாகவும், இதில் இங்கு சிவிலியன்களின் வீடுகள் சில சேதமாகின என்றும் அங்கிருந்து கிடைத்த செய்திகள் நேற்றுத் தெரிவித்தன.

விமானப்படையினருக்குச் சொந்தமான 'கிபிர்' ரக விமானங்களே இத்தாக்குதலை நேற்று நடத்தின என்றும் அறியமுடிந்தது.

எனினும், இது தொடர்பாக படைத்தரப்பு தகவல்கள் எவையும் நேற்று இரவுவரை இச்சம்பவம் தொடர்பில் கிடைக்கவில்லை.

## வடக்கு - கிழக்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்ற அவசரகாலச்சட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது:-

நாட்டின் நிலைமை மிகவும் மோசமாகியுள்ளது. புலிகள் இதுவரை வாகனங்களிலும் வீதிகளிலும் குண்டுகளை வைத்துத்தான் தாக்குதல் நடத்தினர். ஆனால் இப்போது யாரும் எதிர்பார்த்திராத வகையில் புலிகள் விமானங்கள் மூலம் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

அவர்கள் கொழும்பிலுள்ள பல முக்கிய இடங்களைத் தகர்க்கும் பலத்தைப் பெற்றுள்ளனர் என்பதை நாம் ஏற்றுத்தான் ஆகவேண்டும்.

**புலிகள் நாடாளுமன்றத்தைத் தாக்கினால்.....**

இந்த நாடாளுமன்றத்தைப் புலிகள் அவ்வாறு தாக்கினால் எம்மால் என்ன செய்ய முடியும்? அப்படி நடந்தால் நாம் பல நூற்றாண்டுகள் பின்னோக்கிப் போய்விடுவோம்.

இப்போது சர்வதேச நாடுகள் மத்தியில் இலங்கை தொடர்பான நல்ல அபிப்பிரயாம் இல்லை. அந்த நிலைமை மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

புலிகளின் தாக்குதலை முறியடிக்க சரியான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இந்தியா இலங்கைக்கு வழங்கிய ராடர் கருவிகள் சரியாக இயங்காமையால்தான் புலிகளின் வான் தாக்குதலை அரச விமானப் படையினரால் முறியடிக்க முடியாமல் போனது என்று இந்தியா மீது குற்றம் சுமத்துவது சரியில்லை. இந்தியா எமது நல்ல நட்பு நாடு. ஆபத்தில் உதவும் நாடு. அந்த நட்பை நாம் கெடுத்துக்கொள்ளக்கூடாது.

ஆகவே சரியான அரசியல் தீர்வொன்றை முன்வைப்பதன்மூலமே இந்த நாட்டில் இடம்பெற்றுவருகின்ற இனப்பிரச்சினையை இல்லாமல் செய்யமுடியும்.

பிரிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மீண்டும் இணைக்கப்படவேண்டும். அதிகாரப்பகிர்வு அடிப்படையில் தீர்வு காணப்படவேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. அப்போதே உண்மையான சமாதானத்தைக் கொண்டுவரமுடியும். எனது சகோதரி சந்திரிகா பண்டாரநாயக்காவும் இந்த நிலைப்பாட்டையே கொண்டிருந்தார். - என்றார்.(ஐ -7)

## நாளை

பங்குனி - 24
சனிக்கிழமை
07.04.2007
திதி: [illegible]
நட்சத்திரம்: அனுஷம்
பிற்பகல் : 03.03
சுபநேரம் : 03.08 - 04.38
ராகுகாலம் : 09.08 - 10.38

## விடுதலைப் புலிகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்காவோ அன்றி எந்த ஒரு சர்வதேச நாடோ ஒரு வார்த்தையில் கூடக் கண் டனம் தெரிவிக்கவில்லை.

ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகமும் பெயருக்கு இரண்டு வரிகளில் சாடைமாடையாகக் கண்டித்ததோடு சரி.

சர்வதேசநாடுகளின் இந்த மௌனம் புலிகளின் வான் தாக்குதலை அங்கீகரித்துள்ளது. இத்தாக்குதலின் மூலம் சமாதானப் பேச்சுகளுக்கு இட்டுச்செல்ல முடியும் என அவர் கள் நம்புகின்றனர் போலும்.

பாதுகாப்புக் கட்டமைப்புகளில் பாரிய குறைபாடுகள் இருக்கின்றன என்பதை அரசு ஒப்புக்கொள்ளவேண்டும்.

சீனா திறமையான 'ராடர்' கருவிகளை வழங்க முன்வந்தபோதும், இந்தியாவிடமிருந்து 'ராடர்'களை வாங்கியது ஏன்? அரசின் இந்தச் செயல் புலிகளுக்கு வெற்றி பெற வழியமைத்துக் கொடுத்துவிட்டது.

நமது விமானப் படையினருக்கு எதிர்த் தாக்குதல் தொடர்பாக போதிய பயிற்சிகள் அளிக்கப்படவில்லை.

அரசு உள்ளூரில் இருப்பவர்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்ள முயலாமல் வெளிநாடுகளின் உதவிகளை நாடியது.

ஜே.வி.பியினர் அரசுடன் இருந்தால் உலக நாடுகளின் உதவிகளைப் பெறுவதில் சிக்கல் ஏற்படும் என்று அரசு கருதியது. இதனால், ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து 18 வெற்றுத் தோட்டாக்களைத் தன்னுடன் அது இணைத்துக் கொண்டது.

கிழக்கில் பெற்றுள்ள வெற்றியை தனிப்பட்ட அரசியல் லாபமாக்கிக்கொள்ள முயற்சிக்கக் கூடாது. நாட்டு மக்கள் புலிகளின் தாக்குதலினால் பெரும் பீதியடைந்துள்ளனர். புத்தாண்டைக் கொண்டாட முடியாத நிலையில் அவர்கள் இருக்கின்றனர்.

புலிகளின் வான் தாக்குதல் இதுவே கடைசியும் முதலுமாக இருக்கவேண்டும். அதற்கேற்ப பாதுகாப்புத் தரப்புக் கட்டமைப்புகள் சீரமைக்கப்படவேண்டும்.

இந்த அரசாங்கத்தின் மீது நாம் நம்பிக்கை வைக்கவில்லை என்றாலும் நாம் நாட்டின் மீது பற்றுள்ளவர்கள். நாடு காக்கப்படவேண்டும் என்ற நோக்கமுடையவர்கள். அரசை ஆதரிக்காவிட்டாலும் அவசர காலச்சட்டத்தை ஆதரிக்கின்றோம் - என்றார் வீரவன்ஸ. (அ-சி)

## தமிழர்கள் மீது அரசுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நேற்று நாடா ளுமன்றில் விவரித்தார்.

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிக்கும் பிரேரணை மீது பேசுகையிலேயே அவர் இவற்றைத் தெரிவித்தார்.

அவர் தமது உரையில் மேலும் கூறியதாவது:-

எமது மக்களுக்கு எதுவிதப் பாதுகாப்புமில்லை. அரச படையில் 99 வீதமான சிங்களவர்களே உள்ளனர். அவர்களால் எமது மக்களின் பாதுகாப்பை நிச்சயம் உறுதிப்படுத்த முடியாது. அவர்களின் நடவடிக்கைகள் எமது மக்களுக்கு பெரும் அச்சுறுத் தலாகவே உள்ளன.

படையினரைக் கட்டுப்படுத்த இந்த அரசால் முடியவில்லை. தமிழர்கள் மீது அரசிற்கு சிறிதேனும் அக்கறையில்லை. இன்னும் எத்தனையோ தமிழர்கள் பூஸா தடுப்பு முகாம்களில் வாடுகின்றனர்.

எல்லாப் பக்கங்களிலும் எல்லா வகைகளிலும் தமிழர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவர்களின் உரிமைகள் முழுவதும் மீறப்பட்டுள்ளன.

இது மாத்திரமின்றி வடக்கு - கிழக்கு பிரிக்கப்பட்டதனைத் தொடர்ந்து கிழக்கு மிக வேகமாக சிங்கள மயமாக்கப்பட்டு வருகின்றது.

75 சதவீதத்துக்கும் அதிகமான தமிழ் பேசும் மக்கள் வாழும் கிழக்கிற்கு சிங்களவர் ஒருவர் அதுவும் முன்னாள் படை அதிகாரி ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார். நாட்டின் எந்தப் பகுதிக்கும் இராணுவ அதிகாரி ஒரு வர் ஆளுநராக நியமிக்கப்படவில்லை.

கிழக்கில் ஒவ்வொரு துறைகளிலும் சிங்களவர்களே செயலாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். அங்கு தமிழர்களை அடக்கி ஒடுக்கும் நடவடிக்கைகளே மேலோங்கி நிற்கின்றன.

பிரிக்கப்பட்ட வடக்கு - கிழக்கை மீள இணைப்பது தொடர்பாக அரசு இன்னும் எதுவித நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை. நாடாளுமன்றத்துக்கு சட்டமூலம் கொண்டுவந்து மீண்டும் இணைக்க முடியும்.

அதற்கான ஆதரவை ஐக்கிய தேசியக்கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகளிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

ஆனால், அதற்கான நடவடிக்கைகள் எதனையும் அரசு மேற்கொள்ளாமல் தமிழர்களை மேலும் மேலும் துன்பப்படுத்து வதிலேயே ஈடுபட்டுள்ளது.

எல்லா விதத்திலும் தமிழர்களுக்கு எதிராக மனித உரிமை மீறல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கை தொடரும் என்பதில் சந்தேகமில்லை.

**மனித உரிமை மீறல்களை விசாரிக்க சர்வதேச கண்காணிப்புக் குழு**

இலங்கையில் மனித உரிமை மீறல் தொடர்பான கண்காணிப்பு நடவடிக்கை பூஜ்ஜியமாகவே உள்ளது. இந்த மீறல்களைக் கண்காணிப்பதற்காக சர்வதேச பிரதிநிதிகள் இலங்கையில் நியமிக்கப்பட வேண்டும். இலங்கையில் மனித உரிமை மீறல்கள் அதிகரித்துள்ளன என்று ஐ.நா.சபை 2006 இல் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளமை இங்கு கவனத் தில் எடுக்கப்படவேண்டும்.

ஜெனீவா மனித உரிமை ஆணைக்குழு மற்றும் ஹியூமன் வார்ச், இந்திய மனித உரிமை அமைப்புகள் இலங்கையில் இடம்பெற்று வருகின்ற மனித உரிமை மீறல்களைக் கண்காணிக்க இலங்கையில் சர்வதேச பிரதிநிதிகள் நியமிக்கப்படவேண்டும் என்று தெரிவித்துள்ளன.

இலங்கையில் இடம்பெற்று வருகின்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இலங்கை மௌனம் சாதிக்கின்ற நிலையில் சர்வதேச பிரதிநிதிகள் இலங்கையின் மனித உரிமை மீறல் கண்காணிப்பில் ஈடுபடுவது மிகவும் அவசியம்.

இன்று வடக்கு - கிழக்கில் தினமும் தமிழர்கள் கொல்லப்படுகின்றனர், காயப்படுத்தப்படுகின்றனர், வெள்ளைவான்களில் கடத்தப்படுகின்றனர், இளம் பெண்கள் பாலியல் வல்லுறவுக் குட்படுத்தப்படுகின்றனர்.

கிழக்கிலே குறிப்பாக மட்டக்களப்பில் படையினர் மேற்கொண்டுவரும் தாக்குதல்கள் காரணமாக ஒரு லட்சத்து ஐம்பதாயிரத்துக்கு மேற்பட்ட தமிழ்மக்கள் தமது சொந்த இடங்களில் இருந்து இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் வாழ்ந்து வருகின்றனர்.

இடம்பெயர்ந்த இம்மக்களை மீண்டும் குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகளை அரசு இன்னும் மேற்கொள்ளவில்லை.

இந்த மக்கள் மீளக்குடியமர்த்தப்படுகின்றபோது அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் கண்காணிப்பின் கீழே மீள்குடிய மர்த்தப்படவேண்டும் என்பதை நாம் ஏற்கனவே இந்த அமைப்பின் பிரதிநிதிகளை சந்தித்து கோரிக்கை விடுத்துள்ளோம் - என்றார்.

(அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டின் அரைப்பகுதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையம் உற்பத்தி செய்யும் மின்சாரம் ஆகிய வற்றைக் கொண்டே மின் விநியோகத்தை மேற்கொள்ள வேண்டிய இக்கட்டான நிலை மின்சார சபைக்கு ஏற்பட்டுள்ளது. மாற்றுநேர அடிப்படையில் மின்சாரத்தை விநியோகித்தாலும் குடாநாட்டில் அரைவாசிப் பிரதேசம் நாளாந்தம் இருளில் மூழ்கும் அபாயம் தோன்றியுள்ளது.

இதற்கிடையில்- வெளிநாட்டு நிறுவனம் ஒன்றின் உதவியுடன் மின் விநியோகத்தைச் சீராக்க மின்சாரசபை முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாகவும் அறியவந்துள்ளது.

கடந்த வாரம் காங்கேசன்துறைக்கு வந்த குறிப்பிட்ட வெளிநாட்டு நிறுவனத்தின் பிரதிநிதிகள், தமது சார்பில் மின்நிலையம் அமைத்து மின் விநியோகத்தை மேற்கொள்ளும் சாத்தியம் குறித்து ஆராய்ந்துள்ளனர்.

குறிப்பிட்ட நிறுவனம் மின் விநியோகம் செய்வதற்கு முன்வந்து மின் நிலையத்தை அமைக்கும்வரை மின்சார விநியோகத்தை மட்டுப்படுத்த வேண்டிய நிலை நீடிக்கும் என்றும் மிக நம்பிக்கையாகத் தெரியவருகிறது.

(அ-1)

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் சுபமங்களகரமான விய வருஷம் பங்குனித் திங்கள் 24 ஆம் நாள் (07.04.2007) சனிக்கிழமை முற்பகல் 10.47 மணி முதல் 12.30 மணிவரையுள்ள அனுச நட்சத்திரமும் சித்தயோகமும் மிதுன லக்கினமும் கூடிய சுபமுகூர்த்த சுபவேளையில்

திரு.திருமதி இரத்தினவேலு தம்பதியரின் புத்திரன் திருவளர் செல்வன்
**பிறேமகுமார்**
(பிறேம் நகை மாட உரிமையாளர்)
அவர்களுக்கும்



திரு.திருமதி ஆத்மநாதன் தம்பதியரின் புத்திரி திருவளர் செல்வி
**ரஞ்சினி**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் திருமண மண்டபத்தில் திருமாங்கல்யதாரணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வரவேற்புபசாரம்:
08.04.2007 ஞாயிற்றுக்கிழமை மணமகன் இல்லத்தில் பிற்பகல் 3 மணியளவில் நடைபெறும்.

தங்கள் நல்வரவை நாடும்:

திருமதி மு.இரத்தினவேலு (சந்தனம்)
நாகேஸ்வரி குடும்பத்தினர்,
திரு.திருமதி சிவகுமார் குடும்பத்தினர்,
திரு.திருமதி செல்வராசன் குடும்பத்தினர்,
சேச் லேன், கூழாவடி, ஆனைக்கோட்டை,
தொ.பே.: 077 3039572

திரு.திருமதி சி.ஆத்மநாதன் குடும்பத்தினர்,
செல்வன் ஆ.வசந்தகுமார் (சகோதரன்)
உடுவில் தெற்கு, பாலாவோடை,
மானிப்பாய்.

[இரு வீட்டார் அழைப்பு]

(59337) பிறேம் நகைமாடம், பிறேம் பிளாஸா, மானிப்பாய்.

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் சுபமங்களகரமான விய வருஷம் பங்குனித் திங்கள் 24ஆம் நாள் (07.04.2007) சனிக்கிழமை முற்பகல் 10.47 மணி முதல் 12.30 மணிவரையுள்ள அனுஷ நட்சத்திரமும், அமிர்தசித்தயோகமும், மிதுன லக்கினமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

தர்மராசா கனகாம்பிகை தம்பதியரின்
சிரேஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
**ரவீந்திரன்**
அவர்களுக்கும்



தயாளன் கமலேஸ்வரி தம்பதியரின்
சிரேஷ்ட புத்திரி
திருநிறைசெல்வி
**யாழினி**
அவர்களுக்கும்

திருவருளும் குருவருளும் கைகூட அன்பும் அறமும் சேர சுற்றமும் நட்பும் சூழ கன்னிகாதான மாங்கல்யதாரணம் வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் தேவஸ்தான திருமண மண்டபத்தில் (நாச்சிமார் கோயில்) நடைபெற பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராய் சுற்றம் சூழ வருகை தந்து மணமக்களை வாழ்த்தி தொடர்ந்து நடைபெறும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்துசிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வரவேற்புபசாரம் 08.04.2007 ஞாயிற்றுக்கிழமை மணமகன் இல்லத்தில் பி.ப. 3 மணியளவில் நடைபெறும்.

தங்கள் இனிய நல்வரவை நாடும்

திரு. க. தர்மராசா குடும்பத்தினர்.
பிளாக் வீதி,
சங்கானை.

திருமதி கமலேஸ்வரி தயாளன் குடும்பத்தினர்,
திருமதி ராஜேஸ்வரி செல்லத்துரை குடும்பத்தினர்,
25/8, அரசடி லேன், வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(இருவீட்டார் அழைப்பு)

(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

(59336)

வடமாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தால்
மாவட்ட மட்டத்தில் நடத்தப்படும்

## தையல், மனையியல் மாபெரும் கண்காட்சி

இடம் : யாழ்/கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலை
காலம் : 07, 08.04.2007 ஆம் திகதிகளில்
நேரம் : காலை 9.30 மணிமுதல் மாலை 4மணி வரை

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

(59328)

## உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி பழைய மாணவர் சங்கம் பதினேழாவது வருடாந்தப் பொதுக்கூட்டம்

இடம் : அ.மி.கல்லூரி கே.ரி.ஜோன் மண்டபம்
காலம் : 2007.04.15 ஞாயிறு காலை 10மணி
தலைவர் : Dr.மு.தங்கராசா அவர்கள்

தயவு செய்து உரிய நேரத்திற்கு சமுகம் தந்து ஒத்துழைப்பு நல்கவும்.

உடுப்பிட்டி அ.மி.கல்லூரி,
பா.மா.சங்கம்,
உடுப்பிட்டி.

தி.யோகசாமி,
செயலாளர்.

(59317)

## யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கம் வருடாந்தப் பொதுக்கூட்டம் - 2007

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 08.04.2007 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30மணிக்கு கல்லூரி விசாலாட்சி மண்டபத்தில் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இப் பொதுக் கூட்டத்தில் பெற்றோர்கள் தவறாது கலந்துகொள்ளவும்.

திருமதி.வே.பேரின்பநாதன்,
தலைவர் (அதிபர்).

செ.முத்துலிங்கம்,
செயலாளர்.

(59332)


## கப்பல் சேவை

கொழும்புக்கு வெங்காயம் மற்றும் வாகனங்கள் ஏற்ற விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.
021 222 5392

இருஇடங்களிலும் நாளை ஆரம்பம்
A/L 2009
கலை, வர்த்தகப் பிரிவு
ஆரம்பம் :- சனி காலை 8.30 மணி
எமது வழமையான ஆசிரியர் குழு
**நாவலர்**
ஆனைப்பந்தி பலாலிவீதி, யாழ்ப்பாணம். திருநெல்வேலி.

**நிரு ரியூசன் சென்ரர்**
கோண்டாவில்
**A/L 2009**
புதிய பிரிவு
கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான வகுப்புகள்
ஆரம்பம் 07.04.2007 சனி 9மணி

அமைதியான சூழலில் எமது முன்னணி ஆசிரியர் சேவையில்
O/L DAY CLASS
ஆரம்பம் 09.04.2007 காலை 8மணி
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
**மது கல்வி நிறுவனம்**
பத்து வீதி, இருபாலை, கோப்பாய்.

C.C.A
கலை, வர்த்தகம்
**A/L 2009**
சுன்னாகம் புதிய பிரிவு
ஆரம்பம்
07.04.2007 காலை 8 மணி

| | |
|---|---|
| தமிழ் | - பத்மநாதன் |
| அளவையியல் | - சயந்தன் |
| இ.நாகரிகம் | - சுரேஸ் |
| நாடகம் | - கணேஸ் |
| புவியியல் | - பாபு |
| அரசியல் | - திருமுகன் |
| பொருளியல் | - ரூபன் |
| கணக்கீடு | - சசிரூபன் |
| வணிகக்கல்வி | - செந்தூரன் |

## சேர்ட்

தரமான சேர்ட்டுக்கள் மொத்த விற்பனைக்குண்டு.
**கணேசன் சென்ரர்**
கே.கே.எஸ். றோட், இணுவில்
021 222 5708
(59340)


## யா/வைத்தீஸ்வராக் கல்லூரி க.பொ.த.(உ/த)2009 இற்கான அனுமதி

க.பொ.த. (உ/த) 2009 வகுப்பு கலை, வர்த்தக, விஞ்ஞான, கணித பிரிவுகளுக்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன. தகுதியானவர்கள் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

நா.வன்னியசிங்கம்,
அதிபர்.

(சி.48885)

## ஸ்கந்தாவின் இதய அஞ்சலி

ஸ்கந்தாவின் புகழ்பூத்த பழைய மாணவன்
முன்னாள் வடமாநிலக் கல்விப் பணிப்பாளர்

**இரா.சுந்தரலிங்கம்**

அவர்களின் பிரிவு குறித்து எமது இதய அஞ்சலிகளைச் சமர்ப்பிக்கிறோம்.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
சுன்னாகம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

எமது சங்கத்தின் இயக்குநர் சபை உறுப்பினர்
ஐ.அமிர்தரத்தினம் அவர்களின் அன்புத்தந்தை

**அமரர் வி.ஐயம்பிள்ளை**

அவர்களின் மறைவினை நினைவு கூருகின்றோம்.
அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பொதுச்சபை,
தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
நெடுந்தீவு ப.நோ.கூ.சங்கம்,நெடுந்தீவு.

(சி.48887)

## கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத்தின் உப தலைவர் ந.சசிகுமார்
அவர்களின் அன்புத்தந்தை

**அமரர் வ.ஐ.நல்லதம்பி**

அவர்கள் காலமானதையிட்டு அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும், கண்ணீர் அஞ்சலியையும் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பொதுச்சபை,
தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
நெடுந்தீவு ப.நோ.கூ.சங்கம்,நெடுந்தீவு.

(சி.48888)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இராசையா தங்கலட்சுமி (நாயன்மார்கட்டு)



நாயன்மார்கட்டைச் சேர்ந்த திருமதி இராசையா தங்கலட்சுமி காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையாவின் அன்பு மனைவியும் குணசிங்கம், குகதாசன் (திருப்பதி), கருணாநிதி (கண்ணன்), காலஞ்சென்ற காண்டீபன் மற்றும் அச்சுதன், விசாசன் (யாழ். மத்திய கல்லூரி), குணாளன் ஆகியோரின் அன்புத் தாயும் மயூரவதனி, புவனேஸ்வரி, சந்திரலீலா, விமலாதேவி, ஜெயகௌரி ஆகியோரின் அன்பு மாமியும் தர்மேந்திரா, எஜிதரன், ஜனார்த்தன், கஜரூபன், காயத்திரி, குமரன், தர்சினி, கீர்த்திகன், சிந்தூரன், இந்துஜா, பங்கஜா, தெய்விகா, சயந்தவி, பவிசனன் ஆகியோரின் பாட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (06.04.2007) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 01, கோபால் லேன்,
கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
இ. குகதாசன்
(மகன்).

### திருமதி சிவசக்தி இராஜ்குமார்

பெரியரசடி, சங்கத்தானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவசக்தி இராஜ்குமார் 04.04.2007 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகளும் திருமதி க.கனகம்மாவின் மருமகளும் க.இராஜ்குமாரின் அன்பு மனைவியும் தக்சலாவின் (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி தரம் -7) அன்புத் தாயும் சு.சிவானந்தன் (சுவிஸ்), திருமதி பா. சிவயோகம் (சுவிஸ்), சு.சிவராசா (லண்டன்), திருமதி க.சிவாஜினி, சு.சிவகாந்தன்(லண்டன்) ஆகியோரின் அருமைச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(06.04.2007) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்லாரை கொற்புலவு இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கமல்நாதன்
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) [illegible] 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.04.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org